1987 ஏப்ரல் 3]

(இ) சேப்பாக்கம் தொகுதியில் சில பகுதிகளில் குடிசைகள் பிரிப்பால் ஏற்பட்டுள்ள பாதிப்பு,

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில் லாக் நகர், சிந்தாதிரிப்பேட்டை போன்ற பகுதிகளில் பல குடிசைகள் பிரிக்கப் பட்டு குடிசை வாழ் மக்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் அங்கே நீண்டகாலமாகக் குடியிருந்து வருகிறவர்கள், ரேஷன் கார்டுகளை வைத்துக் கொண்டிருப் பவர்கள். அத்துடன் ஓட்டர்ஸ் லிஸ்ட்டிலும் பெயர்கள் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது திடீரென்று எந்தவிதமான அறிவிப்புமில்லாமல் — அவர்களுக்கு மாற்று இடம்கூட தரப்படாமல் — அவர்களுடைய குடிசைகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக அவர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள், அவர்கள் வேறு இடத்திலே போய் தொழில் செய்யவும் முடியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே அரசாங்கம் அந்த உத்தரவை நிறுத்தி வைத்து அவர்களுக்கு உதவிட முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

3. கவன ஈர்ப்பு.

(அ) கன்னியாகுமரி மாவட்டம் தூத்தூரிலிருந்து சென்ற மீனவர்கள் காணாமற் போனது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் கவன ஈர்ப்பு பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். அடுத்து, திருவாளர்கள் கு. ரமணி, கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, வி. பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன் மற்றும் டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''18-1-1987 அன்று குமரி மாவட்டம் தூத்தூர் என்ற இடத்திலிருந்து கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களைக் காணவில்லை என்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டம் தூத்தூரிலிருந்து ''ஜெய்வின் மெஜோ'' என்ற விசைப்படகில் 18-1-87 அன்று மீன்பிடிக்கச் சென்ற ஐந்து மீனவர்களையும் காணவில்லை என்று மீன்துறை இயக்குநருக்கு தகவல் கிடைத்தது. உடனடியாக மீன்துறை இயக்குநர் காணாமற் போன ஐந்து மீனவர்களையும் தேடிக் கண்டு பிடிக்க சென்னையிலுள்ள மெர்க்கண்டைல் மெரைன் துறை முதன்மை செயலர், உதவிப் பொறியாளர் (கம்பி யில்லாத் தந்தி), மாநிலத் துறைமுக அலுவலர், கடலோரக் காவற்படை கமாண்டர் மற்றும் மண்டபத்திலுள்ள கடலோர காவற்படை கமாண்டிங் ஆகியோருக்குத் தகவல் அனுப்பினார். விரைவாக மீனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்குமாறு தகவல் அனுப்பப்பட்டது இம்முயற்சிக்கு உடனடியாக பலன் கிட்டாத தால் சென்னையிலுள்ள கடற்படையினை ஹெலிகாப்டர் மூலம் வானில் பறந்து தேடிடவும் அரசு கேட்டுக் கொண்டது. இம் முயற்சிகள் யாவும் பலனளிக்கவில்லை. இந்நிலையில் இம் மீனவர்கள் இறந்து போனார்கள் எனக் கருதி குடும்பத்தாரால் சின்னத்துறை பங்குகுருவால் இறுதி மதச் சடங்குகளும் நிறை வேற்றப்பட்டுள்ளன. எனவே காணாமற்போன திருவாளர்கள் ஜீபீத், ஸ்டீபன், தியோன், ரோமன்ஸ் மற்றும் பெர்க்மென்ஸ் ஆகிய ஐந்து மீனவர்களில், மீனவர் கூட்டுறவு சங்க உறுப் பினராக இருந்துள்ள திருவாளர்கள் ஜீபீத், ஸ்டீபன், தியோன் ஆகிய மூன்று மீனவர்களின் வாரிசுகளுக்கு தமிழ்நாடு மீனவ விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் தலா ரூ. 15,000 பெற்று வழங்க 'பிஷ்கோபெட்' (FISHCOFED) புது டில்லிக்கு தஸ்தாவேஜி களை மீன்துறை இயக்குநர் அனுப்பிவிட்டார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே இந்த விபத்தில் பாதிக்கப்பட்ட 3 மீனவர்களுடைய குடும்பத் தினருக்கும் தலா ரூ. 15,000 நிவாரணம் கொடுக்கப்பட்டிருக் கிறது என்ற விவரம் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்றே இவ்விபத்தில் பாதிக்கப்பட்டு தற்போது மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிற ரோமன்ஸ் மற்றும் பெர்க்மென்ஸ் ஆகிய இரண்டு மீனவர்களின் குடும்பங்களுக்கும் ஏதேனும் நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். இப்படிப்பட்ட விபத்துக்கள் தொடர்ச்சியாக ஏற்பட்டுக் கொண்டிருப்பதைத் தவிர்க்க 'லைப் போட்ஸ்' போன்ற ஏற்பாடு செய்து அவர்களுக்கு இன்னல் வரும் நேரங்களில் உதவிட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் காணாமல் போய்விட்டால் நாம் தற்போது எடுத்து வருகிற நடவடிக்கைகள் எல்லாம் விவர அறிக்கையில் விவரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

கடலோரத்தில் இருக்கிற காவல் படைக்குத் தகவல் தருகிறோம். ரோந்து வருகிற ஆகாய விமானத்திற்குச் சொல்லி கண்டு பிடிக்கச் சொல்லுகிறோம். இந்த நடவடிக்கைகளை நாம் தொடர்ந்து மேற்கொள்கிறோம். ரோமன்ஸ் மற்றும் டெர்க் மென்ஸ் பற்றி குறிப்பிட்டார்கள். அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன இரண்டு பேருமே இந்த விபத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 2 பேரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக் கிறோம். எனவே அந்த இரண்டு பேருக்கும் உரிய நிவாரணத் தொகை அளிக்க—அல்லது நிவாரண உதவி அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல் போன ஐந்து மீனவர்களில் மூன்று பேர்கள் மீனவர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினராக இருந்தார்கள். எனவே அவர்களுக்கு நிவாரணம் கிடைத்தது. பாக்கி இரண்டு பேரும் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை. எனவே அது தனியாகப் பரிசீலிக்கப்படும்.

(ஆ) திருச்சி மாவட்டத்திலுள்ள சில தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை மற்றும் கழிவுநீரால் பாதிப்பு.

திரு. கே. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருச்சி மாவட்டம் டால்மியா சிமெண்ட்ஸ் (பாரத்) லிமிடெட் மற்றும் டால்மியா சிராமிக்ஸ் தொழிற்சாலை களிலிருந்து வெளிவரும் புகைக் காற்றால் அப்பகுதியில் வாழும் மக்களுக்கு காச நோய் வருவது குறித்தும், லால்குடி அருகே உள்ள சோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் தொழிற்சாலையி லிருந்து வெளிவரும் கழிவுநீர் பங்குனி வாய்க்காலில் கலப்பதால் அப்பகுதி விளை நிலங்களின் பாதிப்பு குறித்தும்'' உள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கையில் அமர்ந்திருப்பது நல்லது.

[முற்பகல் 11.10]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்: